# சிறிலங்கா: காத்திரமான நடவடிக்கைகள்

செப்ரெம்பர் 2022

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரால் ஜெனீவாவில் வைத்து புகழப்பட்ட மனித உரிமைகள் அமைப்புக்கள் உண்மையான அக்கறையுடன் இருப்பின், எடுக்கக்கூடிய சில காத்திரமான நடவடிக்கைகளே இவையாகும். இப்பட்டியலானது எவ்வகையிலும் முழுமையானதல்ல.

| **சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்துக்கள்** | **பரிந்துரைக்கப்பட்ட செயல்கள் / நிபந்தனை** |
|---|---|
| | |
| **காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**<br>The Office on Missing Persons (OMP)[1] | |
| *"சிறிலங்காவானது, விசாணைசெய்து, உறுதிப்படுத்தும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதுடன், தேடிக்கண்டுபிடித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உதவுவதற்கான தனியான அணிகளை உருவாக்கியுள்ளது. அத்துடன் இதுதொடர்பான நீதிச்செயற்பாடுகளில் வெறும் பார்வையாளராகவே செயற்படுகின்றது"* என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரீ செப்ரெம்பர் 2022 இல் கூறினார். இவரே 2019 – 2022 இல் நீதி அமைச்சராக இருந்தார்.<br><br>*"பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும், அனைத்துலக நியமங்களின் பிரகாரம் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நம்பகமான செயன்முறைகளை முன்னெடுப்பதற்கும் இன்னும் நிறைய செய்யப்படவேண்டியுள்ளது என"* எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர் (Hannah Singer) 2022 இல் குறிப்பிட்டுள்ளார்.[2]<br><br>*"முன்னைய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட இரண்டு நிலைமாறுகால நீதிக்கட்டமைப்புக்களான காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவை தொடர்ந்தும் செயற்படுகின்றன. எனினும், குறிப்பாக இவ்வமைப்புக்களின் உறுப்பினர்கள் மாற்றப்படுவதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றன"* என பெப்ரவரி 2022 வெளியிடப்பட்ட UN OHCHR அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. *A/HRC/49/9.* | **18 மே 2009 இல் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய தகவல்கள்**<br>1. ஆட்கொணர்வு மனுவின் பிரகாரம் சட்ட வாளர்களால் கோரப்பட்ட சரணடைந்தோரின் பெயர்ப் பட்டியலானது புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து பெறாது, 58வது டிவிசனிடமிருந்தே பெறப்படல்.<br>2. 2009 மே 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களில் வட்டுவாகல் பாலத்தில் எந்த இராணுவப் பிரிவுகள் (குறிப்பிடத்தக்க பற்றாலியன்கள், விசேட அதிரடிப்படைகள், கொமாண்டோக்கள்) கடமை புரிந்தன என்பதை உறுதிப்படுத்துதல். இப்பிரிவுகளுக்குப் பொறுப்பாக இருந்தது யார்.<br>3. அக்காலப்பகுதியில் இருந்த கட்டளை கட்டமைப்பு தொடர்பாகவும் யுத்த வலய இருப்பிடம் தொடர்பான விரிவான வரைபடமும் பெற்றுக் கொள்ளப்படல் குறிப்பாக ஜெனரல் பொன்சேகா வெளிநாட்டில் இருந்தபோது இராணுவத்தினர் கொழும்பிலிருந்த யாருடைய கட்டளையை ஏற்று செயற்பட்டனர்.<br>4. இவ்வாறு (2) இல் பட்டியலிடப்படும் ஒவ்வொரு கட்டளைத் தளபதியும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கோரிக்கைக்கு அமைவாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்தல். சரணடைந்த சிறுவர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு நடந்தது என்ன? இல்லாவிட்டால் கட்டளைகளை வழங்கிய |

[1] சிறிலங்கா தொடர்பான உயர்ஸ்தானிகரின் முழுமையான அறிக்கை (ஜெனீவா, 2022 செப்ரெம்பர் 12) மீதான விவாதத்தின்போது சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கௌரவ.அலி சப்றி (Hon. Ali Sabry) அவர்களின் அறிக்கை.

[2] https://colombogazette.com/2022/08/30/un-says-more-needs-to-be-done-in-sri-lanka/

| | |
|---|---|
| விசாரணைகளை முன்னெடுப்பதற்காக 20 ஆவணங்களை வழங்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் கோரப்பட்டதாக சிறிலங்காவின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பால் Journalists for Democracy in Sri Lanka (JDS) 2021இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.[3]<br><br>யுத்தத்தின் இறுதியில் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமலாக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்தின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் (Lessons Learnt and Reconciliation Commission (LLRC)) 2012 இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் *“ஆழ்ந்த கவலை”* தெரிவிக்கப்பட்டிருந்தது (பந்தி 4.318). இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளதாக இந்த அறிக்கையின் பந்தி 4.319 இல் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு மீண்டும் நினைவுபடுத்தியிருந்தது. | வர்களின் மெய்க்காப்பாளர்கள் மற்றும் தொடர்பாடல் உதவியாளர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டார்களா என்பதை உறுதிப்படுத்தல்.<br>5. இராணுவத்திடம் சரணடைந்த தமிழ் மக்கள் இராணுவக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது உயிருடனிருந்ததையும் அவர்கள் இராணுவக் காவலில் வைக்கப்பட்டிருந்த போதே கொல்லப்பட்டதையும் காட்டும் படங்களும் காணொளிகளும் ஏன் உள்ளன என்பதையும் நேர்காணலில் உள்ளடக்கவேண்டும். இது மட்டுமன்றி, இவற்றை நேரில்கண்ட நூற்றுக் கணக்கான சாட்சிகளும் உள்ளனர்.<br>6. வட்டுவாகல் பாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்த தமிழ் தகவல் வழங்குனர்களின் பெயர்ப்பட்டியலை சிறிலங்கா இராணுவத்தினர் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திடம் இரகசியமாக வழங்குவதுடன் இத்தகவல் வழங்கியவர்களையும் நேர்காணல் மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள முடியாதா?<br>7. இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவத்தினரின் முகங்கள் தெளிவாகக் காணப்படும் ஒளிப்படங்கள் மற்றும் காணொளிகளும் (சனல்–4 படுகொலை வீடியோ) உள்ள நிலையில், இவ்வாதாரங்கள் இராணுவத்தினரின் தனிப்பட்ட விபரங்களுடன் ஒப்பிட்டு, அதில் என்ன விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை நிரூபிப்பதற்குப் பயன்படுத்த முடியாதா?<br>8. சவேந்திர சில்வா (Shavendra Silva) மற்றும் கமால் குணரட்ண (Kamal Gunaratne) மற்றும் விசேட படைகளின் கட்டளைத் தளபதி கொடிப்புலி (Kodipilli) மற்றும் யுத்த முன்னிலைகளில் செயற்பட்ட இராணுவப் புலனாய்வாளர்களால் 16 – 19 மே 2009 காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட CDMA தொலைபேசி அழைப்புக்களின் பதிவுகள் அத்துடன் இக்காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலரின் தொலைபேசி அழைப்புக்களின் பதிவுகள்.<br>9. மே 16 – 19 காலப்பகுதியில் பதிவாகிய ஆளில்லா வேவுவிமானம் மற்றும் கண்காணிப்புக் காட்சிகளை பார்வையிடுவதற்காக கொழும்பில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளுக்கு வருகை தந்த கட்டளைத் தளபதிகளின் வருகைப் பதிவுகள்.<br>10. இதே காலப்பகுதியில் ஓமந்தையிலிருந்து ஜோசப் முகாமிற்று ஆட்களைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனப் பதிவுகளும் இராணுவ பேரூந்துச் சாரதிகளின் பதிவேடுகளும். |

[3] http://www.jdslanka.org/index.php/news-features/politics-a-current-affairs/1058-sri-lanka-omp-calls-for-20-documents-to-search-for-the-disappeared

| | |
|---|---|
| | 11. வட்டுவாகலில் மனித உடல்களை அகற்றும் பணிக்குப் பொறுப்பாக இருந்த பிரிவுகள் எவை? இவர்களை காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் விசாரணை செய்துள்ளதா?<br>12. இக்காலப்பகுதியில் இராணுவ புகைப்பட மற்றும் ஒளிப்படப் பிடிப்பாளர்களால் எடுக்கப்பட்ட காணொளிகள் மற்றும் ஒளிப்படங்களை காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கோரிப் பெற்றுக் கொண்டுள்ளதா?<br>13. யுத்தத்தின் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை இராணுவம் கைதுசெய்த போது தாம் கையாண்ட நடைமுறையை இராணுவம் விளக்கமுடியுமா? தேடப்பட்ட நபர்களின் பெயர்ப்பட்டியல்கள் இருந்ததா? என்ன அடிப்படையில் அவர்கள் அடையாளம் காணப்பட்டு வகைப்படுத்தப் பட்டார்கள்? |
| வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக சிறிலங்கா அரசானது நீதி விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என 2013 இல் சிறிலங்காவின் உள்நாட்டு பரணகம ஆணைக்குழு (Paranagama Commission) தெரிவித்திருந்தது. (§450-60[4]). | **வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தமை மற்றும் அதனைத் தொடர்ந்து காணாமற் போனமை (மே 18 வழக்குகளின் ஒரு பகுதி)**<br>மேற்கூறிய தகவலுக்கு அப்பால் பின்வரும் தகவல்களையும் கண்டறியவும்:<br>1. அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ (Johnston Fernando), பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச (முன்னாள் அமெரிக்கக் குடிமகன்), மகிந்த ராஜபக்ச, பாலித கோகன்ன (Palitha Kohona) (அவுஸ்திரேலியக் குடிமகன்) விஜய் நம்பியார் (Vijay Nambiar) (ஐ.நா), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றொகான் சந்திரநேரு மற்றும் பல்வேறு இராஜதந்திரிகள் வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.[5] |
| **ஜே.வி.பி காலப்பகுதி**<br>சிறிலங்காவானது "ஒரு நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறை" (சிறிலங்கா அரசாங்கம் 2022) தொடர்பாக பேசுகின்றது. ஆனால் இவ்வாறானதொரு நடவடிக்கையை சிறிலங்கா அரசாங்கமானது ஜே.வி.பி கிளர்ச்சியின் போதும் மேற்கொண்டிருந்தது. இதன்விளைவாக குற்றம் சாட்டப்பட்ட பல்வேறு அரசியல்வாதிகள், இராணுவத்தினர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை விதிக்கப்படுவதற்குப் பதிலாக இவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர்.<br><br>காவல்துறையினரின் பதிவுகள் அனைத்தும் விசாரணை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படுவதுடன் இவ்வாறான பதிவுகள் மற்றும் தகவல் சேகரிப்புப் புத்தகங்களின் | **ஜே.வி.பி காலத்தில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்:**<br>1. காணாமற்போனவர்கள் தொடர்பான மூன்று வலயங்களுக்குமான ஜனாதிபதி ஆணைக் குழுக்களிலும், அனைத்து இலங்கை காணாமற்போனோர் ஆணைக்குழுவிலும் பின்னிணைப்பு செய்யப்பட்டிருந்த இரகசியமாக வைக்கப்பட்ட குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் பட்டியலிலிருந்த பெயர்களை வெளியிடல்.<br>2. இவ்வாணைக்குழுக்களைத் தொடர்ந்து 2000 ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளைத் தொடர்ந்து நடத்துதல். இவ்வழக்குகளின் தற்போதைய நிலைமை என்ன?<br>3. எத்தனை படைவீரர்களுக்கும் காவல் துறையினருக்கும். அவர்களுக்கு எதிரான நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் கொண்டு |

[4] "இக்குற்றச்சாட்டுக்களின் பாரதூரத்தன்மை காரணமாக, தகவல்களைச் சேகரிக்கவும், பொறுப்பாளவர்களை அடையாளம் காணவும், உண்மையை கண்டறியவும் சுயாதியின நீதி விசாரணை ஒன்று தேவை என இவ்வாணைக்குழு முடிவுக்கு வந்துள்ளது."

[5] http://white-flags.org/

| | |
|---|---|
| பாதுகாப்பிற்கு குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பாக இருப்பர் என்பது காணாமற் போனவர்கள் தொடர்பான அகில இலங்கை ஜனாதிபதி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் ஒன்றாகும். | வரப்பட்ட பின்னர் பதவிஉயர்வு வழங்கப்பட்டது என்பதை வெளிப்படுத்தல்.<br>4. ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் பின் இணைப்புக்களை வெளியிடக்கூடாது எனப் போடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இரகசியம் பேணும் சட்டத்தை நீக்குதல். அந்நேரத்தில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் புலிகளுக்கு எதிரான சண்டை நடந்து கொண்டிருக்கின்றது என்பதுதான். இப்போது இக்காரணம் செல்லுபடியாதாகியுள்ளது. |
| | |
| **2022 ஐ.நா. வரைவுத் தீர்மானம்** “காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை மீண்டும் செயற்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.” | **காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பட்டியல்:**<br>1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தகவல்களை குடும்பத்தினரின் தற்போதைய முகவரியின் அடிப்படையில் வகைப்படுத்தாமல், காணாமற்போன இடங்களின் அடிப்படையில் வகைப்படுத்துதல். காணாமற்போன இடங்கள் மற்றும் திகதிகள் அடிப்படையில் விபரங்களைத் தொகுத்து, சரணடைதல் நடந்த நேரத்தில் இருந்த இராணுவ அணிகளுடன் அல்லது இராணுவ முகாம்/சோதனை நிலையத்துடன் சரிபார்த்தல். அவ்வணிகளின் கட்டளை அதிகாரிகளைக் கண்டறிந்து, அவர்களுடன் நேர்காணல் மேற்கொள்ளல்.<br>2. முன்னைய காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுக்களால் திரட்டப்பட்ட பெயர்களும் இந்த காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் பட்டியல்களில் சரியாக இணைக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல். அனைத்து மொழிகளிலும் பெயர்கள் ஒரே மாதிரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும், காணாமற்போன திகதிகள் சரியாக உள்ளதையும் உறுதிப்படுத்தல்[6]. |
| | **பாரிய மனிதப் புதைகுழிகள்:**<br>1. மாதிரித் தேர்வுகளின் சுயாதியினத்தை உறுதிப்படுத்துதல். மாத்தளை மனிதப் புதைகுழியினதும், மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட இரு புதைகுழிகளதும் மாதிரிகளை திரும்பவும் பரிசோதித்தல். |
| “காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் காணாமற்போன ஒருவரைக்கூட இதுவரை கண்டுபிடிக்கவோ அல்லது அர்த்தமுள்ள வழியில் அவர்களது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்தவோ முடியவில்லை. அவர்களது தற்போதைய நோக்கம் இக்கோப்புக்களை விரைந்து மூடுவதேயாகும்” என **மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலகம்** (OHCHR) கூறியது. | 1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு[7] நலன்முரண் இல்லாத (conflicts of interest), நம்பகரமான ஆட்களை நியமனம் செய்வதுடன், இந்நியமனங்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களுடனும் கலந்தாலோசித்தல். அரசியல்வாதிகளையோ அல்லது பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்களையோ உள்ளடக்கல் ஆகாது. |

[6] https://itjpsl.com/assets/ITJP_briefing_note3-ENGLISH-FINAL.pdf

[7] உபாலி அபெயவர்த்தனா (Upali Abeyratne) இவ்வங்கத்தவர்களில் ஒருவர். “........வலிந்து காணாமல் அக்கப்பட்டவர்கள் தொடர்பாக குற்றச்சாட்டில் அரசில் இருந்தவர்களை குற்றச்சாட்ட ஆணைக்குழு முயற்சித்த வேளையில், அரசியல் பழிவாங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக அபேயவர்த்தனா செயற்பட்டது” எவ்வாறு என மன்னிப்புச் சபை கோடிட்டுக் காட்டியுள்ளது.“ https://www.tamilguardian.com/content/still-no-answers-amnesty-international-highlights-struggle-tamil-families-disappeared

| | |
|---|---|
| **குற்றவியல் பொறுப்பு**<br>(Criminal Accountability) | 1. 25 ஆண்டுகளுக்கு முன்னர் 1997 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சிறிலங்கா விசாரணைக்குழு ஒன்றால் முதல்முறையாகப் பரிந்துரைக்கப்பட்டது போன்று, சுயாதியீனத்தை உறுதிப்படுத்த தேவையான சட்டப் பாதுகாப்புக்களுடன் வழக்குகளை மேற்கொள்வதற்கு ஒரு சுயாதியீன வழக்குத் தொடுனர் அலுவலகத்தை ஏற்படுத்துதல்.<br>2. போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்குதல் ஆகியவற்றை வரையறைகள் இன்றி குற்றவியல் குற்றங்களாக மாற்றுவதற்கு சட்டமியற்றுதல். பல்வேறு மட்ட குற்றப் பொறுப்புக்களை, குறிப்பாக கட்டளை வழங்குபவர் அல்லது மேலதிகாரிகள் ஆகியோரையும் தண்டிக்கத்தக்க வகையில் ஏதுவாக்குதல். |
| | |
| “இழப்பீட்டுக்கான அலுவலகம் (**The Office for Reparations (OR)**) அதன் ஆணையினைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றது. அத்துடன் அண்மையில் கொண்டுவரப்பட்ட தேசிய இழப்பீட்டுக்கான கொள்கையும் வழிகாட்டல்களும் வெறுமனே நிதிநட்டஈடு வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல், இதர உதவிகளையும் வழங்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது.” சிறிலங்கா அரசாங்கம் 2022.<br><br>கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் 2011 இல், “செய்த தவறுக்கான கூட்டு வருத்தத்திற்கு” அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. | 1. அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவிற்கான நிதியினை இரத்துச்செய்தல்.<br>2. “நல்லாட்சி அரசாங்கத்தின்” கீழ் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான அரசியல் வாதிகளுக்கும் பொதுத்துறை ஊழியர்களுக்கும் அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு இழப்பீடு வழங்கமாட்டாது என தெளிவான அறிக்கை ஒன்றை வெளியிடுதல்.<br>3. வெளிநாடுகளில் உள்ளவர்கள் உட்பட, விருப்பத்திற்கு மாறாகத் தடுத்து வைக்கப்பட்டார்கள் என்ற அடிப்படையில் புனர்வாழ்வுச் சான்றிதழ் வைத்துள்ள அனைவருக்கும் இழப்பீடு வழங்குதல். (மன்னிப்புத் தொடர்பாக கீழே பார்க்கவும்)<br>4. சித்திரவதைகள் இடம் பெற்றதுடன், விடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் கடத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களில் IOM இற்கு இருந்த வகிபாகம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளல்.<br>5. கோவிட் காலத்தில் இறந்து போனவர்களின் சடலங்களை தகனம்செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட முஸ்லீம் குடும்பங்களுக்கான இழப்பீடு வழங்கல்.<br>6. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் சரத்துக்கள் உள்நாட்டுச் சட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப் படுத்தவும், தனிப்பட்ட முறைப்பாடுகளைப் கருத்தில் எடுப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் திறன் நிலைநிறுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் சிங்கராசா வழக்கில் (Singarasa case)[8] வழங்கப்பட்ட உச்சரீதிமன்றத்தின் தீர்ப்பினை மறுபரிசீலனை செய்வதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தல். (OISL 2015). |

| | |
|---|---|
| | 7. இராணுவத்தால் வேண்டுமென்றே அழிக்கப்பட்ட (இது ஒரு போர்க்குற்றம்) கல்லறைக் கற்கறையும் தனிப்பட்ட குடும்பங்கள் விரும்பும் வகையில் மீண்டும் அமைப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் மானியம் வழங்குதல். *(துக்கம் அனுஸ்டிப்பதற்கான உரிமை தொடர்பில் கீழே பார்க்கவும்)*<br>8. கணிசமான தமிழ்மக்கள் வசிக்கும் நாடுகளில் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவியல் உதவியை வழங்குவதற்குரிய தேவைமதிப்பீட்டை மேற்கொள்வதுடன், இவ்வாறான சேவைகளுக்குத் தேவையான நிதியுதவியையும் வழங்கும்படி OISL கூறியது. |
| | |
| **இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் (குற்றச்சாட்டுக்களை) புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**<br>Commission to Investigate Allegations of Bribery and Corruption (CIABOC) | 1. CIABOC இற்கு நம்பகரமான தனிநபர்களை நியமனம் செய்தல்– 3 ஆணையாளர்கள் இதற்குப் பொறுப்பாக உள்ளார்கள் – ஒருவர் ஊடகவியலாளர் ஜே.எஸ். திசநாயக்காவிற்கு 20 வருட கடூளியச் சிறைத்தண்டனைவிதித்த தீபாலி விஜெசுந்தர (Deepali Wijesundara)– இவ்வூடகவியாளர் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்றார். இவரை ஒபாமா மனச்சாட்சியின் கைதி என்று புகழ்ந்தார்; இன்னொருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சி.என்.வகிஸ்ரா (CN Wakishta) (சித்திரவதையில் இவருக்கிருந்த பங்கு தொடர்பாக ITJP ஆவணத்தைப் பார்க்கவும்); மூன்றாம் நபர் ராஜபக்சாக்களுக்கு நெருக்கமானவர் என்று சொல்லப்படுகின்றது.<br>2. எட்வேட் றியன்சிய (Edward Rienzie) வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட FCID யின் முன்னாள் பணிப்பாளர் ரவி வைத்தியலக்கரா (Ravi Waidyalankara) மீது குற்றத்தாக்கலை மேற்கொள்ளல், றியன்சியவைக் கைதுசெய்து, அவரையும், அவரது பணமோசடிச் சொத்துக்களையும் அமெரிக்காவிடம் ஒப்படைத்தல்.<br>3. 2015–19 அரசாங்கத்தின்கீழ் பதவிவகித்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவரும் சில வேளைகளில் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகியுள்ள அமைச்சுச் செயலர்களை (பதவியுயர்வு வழங்குவதற்குப் பதிலாக) பணிஇடைநிறுத்தம் செய்தல். கடன்வழங்குவதற்குரிய ஒரு நிபந்தனையாக இதனை முன்வைக்கவும்.<br>4. நிஸங்க சேனாதிபதி (Nishanka Senadhipatti) அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவின் தீர்ப்பினை இரத்துச் செய்தல். காரணம் அவர் பொதுத்துறைப் பணியில் கடமையாற்றவில்லை.<br>5. இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை சிறிலங்கன் எயார்லைன்ஸ் இலஞ்சமாகப் பெற்றதாக எழும் குற்றஞ்சாட்டுத் தொடர்பாக – சிறிலங்கன் எயார்லைன்ஸின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கபில சந்திரசேனவின் (Kapila |

| | |
|---|---|
| | Chandrasena) மனைவி பிரியங்கா நியோமாலி விஜெநாயகாவை (Priyanka Niyomali Wijenayaka) விசாரணைசெய்து, குற்றச்சாட்டலை மேற்கொள்ளல்.[9] |
| | |
| **தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம்**<br>Office for National Unity and Reconciliation (ONUR)<br><br>LLRC: "சமூகங்களிடையேயுள்ள பொதுத்தன்மைகளையும் பரஸ்பர புரிந்துணர்வையும் கோடிட்டுக்காட்டும் திரைப்படங்கள், தொலைக்காட்சி, மற்றும் மேடை நாடகங்கள், இதர தயாரிப்புக்கள் என்பன ஊக்குவிக்கப்பட்டு, குறிப்பாக இளம் தலைமுறையினரின் நன்மைக்காகப் பரப்பப்படல் வேண்டும்."<br><br>"மோதலின் துன்பியலை முழுமையாக ஏற்றுக்கொள்வதும், சிங்கள மற்றும் சமூகங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களதும் சமூக அமைப்புக்களதும் கூட்டுப் பங்களிப்பும் நல்லிணாங்க செயல்முறைக்குத் தேவையாக உள்ளது". §9.284, LLRC, 2011. | 1. சனல்–4 இன் கொலைக்களங்கள் (Killing Fields) நிகழ்ச்சியையும் மௌனிக்கப்பட்ட குரல்கள் (Silenced Voices) நிகழ்ச்சியையும் SLRC, ITN ஆகிய தொலைக்காட்சி சேவைகளில் சிங்களத்தில் ஒளிபரப்புச் செய்தல்.<br>2. "புனர்வாழ்வு" நிகழ்ச்சித் திட்டத்தை உடனடியாக நிறுத்துதல். காரணம் சித்திவதை மற்றும் சட்டவிரோத தடுப்பு ஆகியனவே அதில் இடம்பெறுகின்றது.<br>3. UN WGAD கூறியதுபோன்று, விருப்பத்துக்கு முரணாகத் தடுத்து வைத்தமைக்காக புனர்வாழ்வு வழங்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோருவதுடன், அவர்களுக்கு இழப்பீட்டையும் வழங்குதல். தற்போது வெளிநாடுகளிலுள்ள ஆயிரக் கணக்கானோரும் இதில் உள்ளடங்கும்.<br>4. குற்றவியல்/பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தைக் கலைத்தல்<br><br>**துக்கம் அனுசரிக்கும் உரிமை**<br>5. முன்னாள் விடுதலைப் புலிகளது கல்லறைகள் புல்டோசர் வாகனங்களால் அழித்து, அகற்றப்பட்டுள்ளன– தற்போதும் அவை அமைந்திருந்த இடங்கள் அங்கேயே உள்ளன. அந்த இடங்களிலும் இதர இடங்களிலும் மீண்டும் கல்லறைகளை அமைப்பதற்கும், தங்கள் அன்புக்குரியவர்களது எச்சங்களை மீட்டெடுத்துப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவர்களின் குடும்பங்களை அனுமதித்தல்.<br>6. மே 18 போர் முடிந்த வருடாந்த நிகழ்வு – எவ்வித அச்சமுமின்ற தமிழ் மக்கள் துக்கத்தை அனுசரிப்பதை ஏதுவாக்குவதுடன், நிகழ்வுகள் முடிந்தபின்னர், மக்கள் கைது செய்து, கொண்டு செல்லப்படாமல் இருப்பதை உறுதிப் படுத்துவதற்காக சர்வதேச கண்காணிப் பாளர்களின் பிரசன்னத்தை ஏற்படுத்தல்<br><br>**இராணுவப் பிரசன்னத்தை விலக்குதல்**<br>7. வடக்குக் கிழக்கில் நடைபெறும் பொது மக்களுடைய நிகழ்வுகளில் (உதாரணத்திற்கு |

[9] **பிரித்தானிய நீதிமன்றத் தீர்ப்பு**

ஜனவரி 2020 இல், லண்டனில் உள்ள Southwark Crown நீதிமன்றம், 20 நாடுகளில் ஒப்பந்தங்களுக்கு லஞ்சம் கொடுத்ததற்காக ஏயார்பஸ் நிறுவனத்திற்கு 3 மில்லியன் டொலர்கள் அபராதம் விதித்தது. அதில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவின் மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்கவுக்கு 2 மில்லியன் டொலர்கள் இலஞ்சமாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 10 ஏயார்பஸ் விமானங்களை சிறிலங்கன் எயார் லைன்ஸ் வாங்குவதற்கும் மேலும் 4 விமானங்களை குத்தகைக்கு எடுப்பதற்கும் அவர் செல்வாக்கு செலுத்துவதற்கு 2013 இல் 16.84 மில்லியன் டொலர்கள் வரை பேரம்பேசப்பட்டதாகவும், ஆனால் 2 மில்லியன் டொலர்கள் மட்டுமே செலுத்தப்பட்டதாக நீதிமன்றம் கூறியது. இங்கிலாந்து நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர், பெப்ரவரி 2020 இல் கபில சந்திரசேனவும் அவரது மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்கவும் இலங்கையில் சிறிது காலம் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| | விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகள்) தங்களுடைய பதவிகளைப் பயன்படுத்தி படையதிகாரிகள் கலந்துகொள்வதைத் தடுக்கும் வகையில் திருத்தி, வெளியிட்டு, நடைமுறைப்படுத்தல்.<br>8. கிராம மட்டங்களில் நடைபெறும் கலாச்சார, விளையாட்டு நிகழ்வுகளுக்கு இராணுவத்தினர் அன்றி, கிராம நிலதாரிகளே அனுமதி வழங்குவதை உறுதிப்படுத்தல். அத்துடன், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள கச்சேரி போன்ற பொதுமக்கள் அலுவலகங்களில் இராணுவத்தினர் பணியில் ஈடுபடவோ அல்லது செல்வாக்குச் செலுத்தவோ முடியாது என்பதை உறுதிப்படுத்தல்.<br>9. இந்து தொல்லியல் மற்றும் புனிதத் தளங்களின் மீது இராணுவத்தின் ஆதரவுடன் புதிய புத்த விகாரைகள் அமைக்கப்படுவதை நிறுத்துதல்.<br>10. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளை திருப்பிக்கொடுப்பதை முன்னுரிமைப் படுத்துவதுடன், பொதுமக்கள் செயற்பாடுகளில் இராணுவம் தலையிடுவதையும் முடிவுக்குக் கொண்டுவரல். முன்னர் மோதல் நடந்த இடங்களில் இராணுவத்தால் நடாத்தப்படும் வியாபாரங்களின் உரிமையினை உள்ளூர் மக்களிடம் ஒப்படைத்தல்.<br><br>**முன்னைய விசாரணைகளை வெளியிடுதல்**<br>11. காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட 1991 மற்றும் 1992 பிரேமதாச அல்லது விஜெதுங்கா விசாரணைக் குழுக்களின் (1991 and 1992 Premadasa or Wijetunga Commissions) முடிவுகளை வெளியிடுதல்.<br>12. கெய்ட்டியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட சிறிலங்கா அமைதிகாப்புப் படையினர் தொடர்பாக விசாரணையின் முடிவுகளை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்.<br>13. மனித உரிமைகள் தொடர்பாக விசாரணை ஆணைக்குழுக்கள், காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு, பொதுமக்கள் இழப்புக்கள் தொடர்பான இராணுவ விசாரணை மன்று ஆகியவற்றின் பல வெளியிடப்படாத அறிக்கைகளை வெளியிடுதல்.<br><br>**பொதுத்துறைப் பணிகளுக்கு நியமிப்பதைத் தடைசெய்தல்**<br>14. UN OISL அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள டக்ளஸ் தேவானந்தாவை ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சராக நியமிப்பதை நிறுத்துதல்.<br>15. இதுபோன்றே கருணா, பிள்ளையான், இனியபாரதி ஆகியோரும் முழுமையான |

| | |
|---|---|
| | விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், பொதுத் துறைப்பதவிகள் வகிக்க அனுமதிக்கப்படக்கூடாது. |
| **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு** (The Human Rights Commission of Sri Lanka (HRCSL)) | 1. கொலைகள், சித்திரவதை, கடத்தல்கள், பாலியல் வன்முறைகள், இதர வன்முறைகள் உள்ளிட்ட அதன் விசாரணைக் கோப்புக்களை UN SLAP உடன் பகிர்தல்.<br>2. அமைதிகாப்புப் பணிக்கான வெளிநாடுகளில் பணிக்கமர்த்தப்பட்ட அனைத்துப் படை வீரர்களதும் பெயர்களை வெளியிடல்.<br>3. டிகானா (Digana) வன்முறை அறிக்கையினை வெளியிடல்<br>4. உயிர்த்த ஞாயிறுக்குப் பின்னான முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை அறிக்கையை வெளியிடல்.<br>5. 2022 மே 9 வன்முறை விசாரணையின் முடிவுகளை வெளியிடல். |
| **தேசியப் பேச்சுவார்த்தை**<br>(National Dialogue) | 1. மேலதிக ஆலோசனைகளுக்குரிய தேவை இல்லை. மாறாக ஆலோசனைப் பணிக்குழுவின் (Consultation Task Force) பரிந்துரைகளையே ஏற்றுக்கொள்ளல். |
| **உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு**<br>(Truth Commission) | 1. இதற்கு ஒரு பெறுமதி இருக்கவேண்டுமாயின், தண்டனைகளிலிருந்து விலக்களிப்பப்படுவதைத் தடுப்பதற்காக மேம்படுத்தப்பட்ட கோட் பாடுகளுக்கு இணங்குதல், மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, கலப்பு நீதிமன்றம், பொருத்தமான இழப்பீடுகள், பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு ஆகிய நான்கு தூண்கள் உள்ளடக்கிய முழுமையான விரிவான நடைக்காலத் திட்டம் ஒன்றினை அமுல்ப்படுத்துவது.<br>2. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். இதில் உயிர் தப்பிவர்கள் நேரடியாக கலந்துகொள்வதை உள்ளடக்கியும், புலம்பெயர்ந்த சமூகங்களும் பார்க்கக்கூடியவாறும் பங்குபெற்றக் கூடியவாறும் நேரடியாகவும் இணையவழியிலும் மும்மொழிகளிலும் ஒளிபரப்புச் செய்யப்படல் வேண்டும். இதற்கு ஒரே நேரத்தில் மொழிபெயர்ப்புத் திறன்களில் முதலீடு செய்வது அவசியமாகின்றது. |
| **பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தம்**<br>(Security Sector Reform)<br><br>இவை நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கென பரிந்துரைக்கப்படும் ஆரம்ப முயற்சிகளே, முழுமையான சீர்திருத்த முன்மொழிவுகள் அல்ல. | 1. கெய்ட்டியில் (2004–7) செயற்பட்ட இராணுவ அதிகாரிகளையும் வடக்கில் அல்லது கிழக்கில் இறுதிக்கட்டப் போரில், வழங்கல் விநியோகம் மற்றும் கட்டளை மையத்தில் செயற்பட்டவர்கள் உட்பட்ட, அதிகாரிகளையும் ஆராய்ந்து வடிகட்டல். போர் வலயத்திற்கு அப்பால் கட்டளை வழங்கும் அதிகார நிலையில் இருந்தவர்களையும், குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்யத் தவறியவர்களையும் இதில் உள்ளடக்குதல் (உதாரணத்திற்கு இராணுவத்தின் சட்டத் திணைக்களம்)<br>2. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட செயற்பாட்டின் வெளிப் படைத் தன்மையினை காண்பிப்பதற்காக வெளி நாடுகளுக்கு அமைதிகாக்கும் நடவடிக்கைகளுச் |

| | |
|---|---|
| | செல்லும் அனைவரதும் பெயர், பதவிநிலைகளை வெளியிடுதல்.<br>3. OISL அறிக்கையில் வெளிப்படையாகவோ / மறைமுகமாகவோ பெயர் குறிப்பிடப் பட்டுள்ளவர்களை, குறிப்பாக சவீந்திர சில்வா, கமல் குணரத்தின, சுரேஸ் சல்லே, மற்றும் இதர சம்பந்தப்பட்ட நபர்களை பதவியல் வைத்திருப்பதையோ, வேறு பதவிநிலைகளுக்கு பதவிஉயர்வு வழங்குவதையோ நிறுத்திவைத்தல்.<br>4. ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு/விசாரணைகளுக்கு உட்பட்டவர்கள், நம்பகரமான நீதிநடவடிக்கைளில் தங்கள் தாம் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்கும் வரை, நியமனம் வழங்குவதை நிறுத்திவைத்தல்.<br>5. பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தல்<br>6. பாதுகாப்பு படையினரின் எண்ணிக்கையைக் குறைத்தல்<br>7. காவல்துறையை இராணுவ மயமாக்குவதை நிறுத்துதல்<br>8. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விசாரணைக்கு உதவுவதற்கு ஸ்கொட்லாண்ட யாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது – ஒரு அடையாள வழக்குகளில் ஒன்றாக திருகோணமலை துப்பாக்கிச்சூட்டு விசாரணையை மீளாய்வு செய்வதற்கும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தல். |